இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

வானதூதர் அவரைப் பார்த்து, “மரியா, அஞ்சவேண்டாம்; கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்; அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் பெரியவராயிருப்பார்; உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது” என்றார். (லூக்கா 1:30-33)

# இயேசுவே நம் நம்பிக்கையின் பிறப்பிடம்

## பேராயரின் கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தி

**கோலாலம்பூர்;** பல வழிகளில் இந்த 2020 - ஆம் ஆண்டு நமக்கு ஒரு கடினமான ஆண்டாக இருந்தது. நாம் பல துன்பங்களையும், சவால்களையும், நிச்சய மற்ற சூழல்களையும் எதிர்கொண்டோம். உலகம் முழுவதையும் பாதித்தக் கோவிட்-19, தொற்றுநோய் நம்மையும் உடல், பொருளாதாரம், உணர்ச்சி மற்றும் ஆன்மீக ரீதியிலும் பாதித்தது. ஆனால் சரியான நேரத்தில் விண்ணக அரசை நோக்கி பயணிக்கும் கடவுளின் மக்களாகிய நமக்கு, இத்தகைய அனுபவங்கள், பாதிப்புகள் மற்றும் நிச்சயமற்ற தன்மை போன்றவை ஒரு பொருட்டு அல்ல என்பதை இந்த கிறிஸ்துமஸ் உணர்து வதாக உள்ளது.

இயேசுவின் பிறப்புக்காக யோசேப்பும் மரியாவும் பெத்லகேமுக்குச் சென்றபோது தடைகளை பலவற்றை எதிர்கொண்டனர். அவ்வாறே, நம்முடைய வழியில் பல தடுமாற்றங்கள் இருந்தபோதிலும் நாம் முன்னேறுகிறோம் - சில நேரங்களில் வலுவான, சில நேரங்களில் பலவீனமான, சில சமயங்களில் நம்பிக்கையுடனும் மற்றும் சில சமயங்களில் சந்தேகத்துடன் நாம் பயணித்தாலும் - இறுதியில் இந்த குறிப்பிட்ட குழந்தையின் வருகை கடவுளின் நல்ல வாக்குறுதிகள் அனைத்தும் நம்மில் மீண்டும் பிறக்கின்றன என்ற உண்மையை வெளிப்படுத்துகின்றது.

கடவுள் நம்முடன் இருக்கிறார், நம்முடைய வாழ்க்கையையும், மகிழ்ச்சியையும் சவால்களையும் நம் வேதனைகளையும் துன்பங்களையும் பகிர்ந்து கொள்கிறார். இம்மானுவேல் எனும் சொல் கிறிஸ்மஸ் எனும் கொடையை நன்கு விவரிக்கிறது. அதாவது, 'கடவுள் நம்மோடு உள்ளார்' என்பதாகும். இதுவே கிறிஸ்துமஸ் உணர்த்தும் முக்கிய செய்தி. நம் பயணத்தில் எத்தகைய தடைகளைச் சந்திக்க நேர்ந்தாலும், 'கடவுள் நம்மோடு உள்ளார்' என்பது நாம் உலகெங்கும் ஒலிக்கச் செய்ய வேண்டிய செய்தியாகும்.

இயேசுவின் பிறப்பை மனதில் கொண்டு, இந்த ஆண்டு கிறிஸ்துமஸ் பெருவிழாவைக் கொண்டாடும் வேளை நமது அன்றாட



*கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ்*

வாழ்வு கடவுளின் அன்பால் ஆழமாகத் தொடப்படுவதாக. பிறந்த குழந்தை இயேசுவைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, நம் இருதயங்கள் மகிழ்ச்சியால் நிரம்பட்டும். நமது இறைவேண்டல்கள் யாவும் இயேசு கொணரும் அன்பையும் நம்பிக்கையையும் உலகத்துடன் பகிர்ந்து கொள்ளும் விருப்பத்தை கொண்டிருக் கட்டும். நமது அடிப்படை திருஅவை சமூகங்களையும் பங்கு சமூகங்களையும் ஈடுபடுத்தி, இயேசுவின் கொடையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான புதிய, வாழ்வளிக்கும் வழிமுறைகளைக் குறித்து ஆராய்வோம். நமது ஆதரவு, அக்கறை மற்றும் அன்பு ஆகியவை தேவைப்படுபவர்களை, ஏதோவொரு விதத்தில் பாதிக்கப்பட்டுள்ளவர்களை நாம் அணுகிச் செல்ல இதுவே ஏற்ற தருணம்.

கிறிஸ்மஸ் கொண்டாட்டம் கொண்டிருக் கும் உண்மையான அர்த்தத்தை ஆண்டு முழுவதும் நம் வாழ்வில் வாழ்ந்து காட்டுதல் வழி கடவுளின் அன்பையும் நம்பிக்கை யையும் உலகிற்குக் கொண்டு செல்வோம். நீங்கள் சந்திக்கும் மக்களைப் பாருங்கள். இயேசு அவர்கள் மத்தியில் இருக்கிறார் என்பதைக் கண்டுணருங்கள். பிறருக்காக நீங்கள் கொண்டிருக்கும் கொடைக்காக நன்றி கூறுங்கள். நமது இந்த உலகத்திற்கு இயேசுவின் செய்தி, அவருடைய அன்பு, மன்னிப்பு, அவருடைய இரக்கம் மற்றும் அவருடைய பாதுகாப்பு தேவைப்படுகிறது.

கிறிஸ்மஸ் கொணரும் கொடையில் ஆழ்ந்திருக்கும் நாம் ஒவ்வொருவரும் அவரால் அன்பு செய்யப்படுகிறோம். இந்த அன்பே உலகை உருமாற்ற வல்ல ஆற்றல் என்பது நமது எதிர்நோக்கு ஆகும்.

நம்மில் நிறைந்திருக்கும் கடவுளின் அன்பையும் நம்பிக்கையையும் கொண்டு, உலகத்தில் அன்பு மனுவுருவானதை வெளிப்படுத்த நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும். அதே வேளையில், வரவிருக்கும் ஆண்டில், தமது கத்தோலிக்க நம்பிக்கை யின் கொடையை நமக்கு அடுத்திருப்ப வருடன் பகிர்ந்து கொள்ள தீவிரமாக முயற்சிப்போம்.

ஆண்டின் இந்த சிறப்பான நேரத்தில், இந்த கிறிஸ்துமஸ் கொண்டாட்டக் காலத்தில் குழந்தை இயேசுவின் செய்தி நமது மாமறைமாவட்டத்திலும், பங்குகளிலும், நமது இல்லங்களிலும் , நம் இதயங்களிலும் மற்றும் ஆன்மாக்களிலும் மறுபிறப்பு எடுக்க வேண்டும் என்று நான் இறைவேண்டல் செய்கிறேன். 2021-ஆம் ஆண்டில் உங்கள் அனைவருக்கும் அமைதி, பேறுவகை, உடல்நலம், மகிழ்சி யாவும் பல ஆசீர் வாதங்கள், அருள்கொடைகள் வழியாக மலரும் இப்புத்தாண்டில் கிட்டிட இறைவனை வேண்டுவதோடு, உங்கள் அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு நல்வாழ்த்தினைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

+ பேராயர் ஜூலியன் லியாவ்,
கோலாலம்பூர் மாமறைமாவட்டம்.






# சிங்கப்பூர்: நற்செய்தி அறிவிக்கப்பட்டதன் 200-ஆம் ஆண்டு

**வத்திக்கான்:** சிங்கப்பூர் கத்தோலிக்கர், தங்களின் நம்பிக்கையைப் புதுப்பிக்கவும், மறைப்பணி ஆர்வத்தை உயிர்த்துடிப் புள்ளதாக வளர்க்கவும் வேண்டும் என்று, அந்நாட்டு தலத்திருஅவை அதிகாரி ஒருவர், அழைப்பு விடுத்துள்ளார்.

சிங்கப்பூரில் முதன்முதலில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதன் இருநூறாம் ஜூபிலி ஆண்டு நிகழ்வுகளை, டிசம்பர் 13, கடந்த ஞாயிறன்று, இணையம் வழி திருப்பலி நிறைவேற்றி ஆரம்பித்துவைத்த, சிங்கப்பூர் பேராயர் வில்லியம் கோ அவர்கள், உயிரூட்டமுள்ள தலத்திருஅவையை உருவாக்குவதற்கு, அனைத்து கத்தோலிக் கரும் ஒன்றிணையுமாறு கேட்டுக்கொண் டார்.

இந்த துவக்க நிகழ்வின் ஒரு கட்டமாக, புதிய ஜூபிலி இணையதளம் திறந்து வைக்கப்பட்டது.. மேலும், இந்த சிறிய தென்கிழக்கு ஆசிய நாட்டில், கத்தோலிக்கத் திருஅவை, சமுதாயத்தில் ஏற்படுத்தியுள்ள நல்தாக்கங்களை விளக்கும் ஆவணப்படம் ஒன்றும் திரையிடப்பட்டது. 'நம்பிக்கையோடு சுடர்விடுங்கள்' என்ற தலைப்பில் சிறப்பிக்கப்படும் ஜூபிலி ஆண்டின் நிறைவு, எட்டு நாள் விழாக் கொண்டாட்டங்களோடு, 2021-ஆம் ஆண்டு, டிசம்பர் 11-ஆம் தேதி நிறை வடையும்.

1819-ஆம் ஆண்டில், Sir Stamford Raffles என்ற ஆங்கிலேயர், இங்கிலாந்து பேரரசின் வர்த்தக இடமாக, சிங்கப்பூரை உருவாக்கினார். அதற்கு இரு ஆண்டுகள் கழித்து, 1821-ஆம் ஆண்டு டிசம்பர் 11-ஆம் தேதி, MEP எனப்படும், பிரெஞ்சு வெளிநாட்டு மறைப்பணி சபையின் அருள்பணியாளர் Laurent Imbert அவர்கள், சிங்கப்பூரில் தமது மறைப்பணியை ஆரம்பித்தார். அதுவே, சிங்கப்பூரில் கத்தோலிக்கத் திருஅவை உருவாக அடித் தளமானது. அருள்பணியாளர் Laurent Imbert அவர்கள், கொரியா நாட்டின் Saenamteo-வில், 1839ம் ஆண்டு செப்டம்பர் 21ம் தேதி, மறைசாட்சியாகக் கொல்லப்பட்டார். 1984-ஆம் ஆண்டு மே மாதம் 6-ஆம் தேதி, திருத்தந்தை புனித ஜோன் பவுல் அவர்கள், புனிதர் நிலைக்கு உயர்த்திய 103 கொரிய மறைசாட்சிகளுள் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.தற்போது சிங்கப்பூர் மாமறைமாவட்டத்திலுள்ள மூன்று இலட்சத்து அறுபது ஆயிரம் கத்தோலிக்கர், 32 பங்குத்தளங் களில் வாழ்கின்றனர்.

பல இனம் மற்றும், பல மதங்களைக் கொண்டிருக்கும் சிங்கப்பூரின் 56 இலட்சம் மக்களில் 76 விழுக்காட்டிற்கும் அதிகமா னோர் சீனர்கள். மேலும், 15 விழுக்காட்டு மலாய் இன மக்களும், 7.4 விழுக்காட்டு இந்தியர்களும் உள்ளனர். (UCAN)



## மகிழ்ச்சியின் மகிழ்ச்சி

### M. செலவராஜூ (மலாக்கா)

இயேசுவே! நீர் பிறந்து இவ்வருடம் 2021 ஆண்டுகள்
இறைவனாய் இருப்பதால் இறைமக்கள் நினைவில் இன்றும் வாழ்கிறீர்,
இருப்பவர்கள் இல்லாதிருப்பவர்கள் இதயத்தில் ஏதோ ஒரு மகிழ்ச்சி
இனிமையான மகிழ்ச்சி, இன்பமான மகிழ்ச்சி
எதிலும் எவரிடமும் கிடைக்காத மகிழ்ச்சி!

உம்மை நினைத்தாலே உள்ளத்தில் மகிழ்ச்சி,
உம் வார்த்தைக் கேட்டாலே வாழ்வில் மகிழ்ச்சி.
உம்மைப் போற்றி புகழ்ந்து பாடினாலே இதயத்தில் மகிழ்ச்சி,
உம்மை குறித்து பிறரிடம் பேசினாலே, மனதிற்குள் மகிழ்ச்சி!

நீர் தொட்டால் நோய், சுகப்பட்டு போகும்,
நீர் தொடாமலே ஒரு வார்த்தை சொன்னாலும், அது போகும்.
நீர் மட்டுமல்ல, நான் உமைத் தொட்டாலும் நோயும் பேயும் எனை விட்டுப் போகும்,
நீர் மட்டும் என்னோடு இருப்பதால், கொரோனாவும் கொட்டுப்பட்டு ஓடும்!

அதிய நட்சத்திரம் உமை தேடி ஓடி வந்தது,
அகிலத்து ராஜாக்களும் உம் முன் மண்டியிட்டு வணங்கினர்.
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் ஆயினும் உம் போல் அரசன் பிறக்கவில்லை.
அகிலத்தில் அனைவரும் இதையறிவர், இறைவன் நீரே என வணங்குவர்!

மரியா மாட்டுத் தொழுவத்தில் உமை ஈன்றெடுத்தார்,
மானிடமகனாய் மனிதர் உள்ளத்திலும் அன்றே பிறந்துவிட்டாய்.
மாளிகையிலும் மகிழ்ச்சி, மண் குடிசையிலும் மகிழ்ச்சி விண்ணிலும் மகிழ்ச்சி
மாதவம் செய்திட வேண்டும் மாதவா, உம் பாதம் பணிந்திடவே!

கிறிஸ்து பிறந்தநாள் மகிழ்ச்சி, அதுபோல்
கிடைக்காது உலகில் உன்னத மகிழ்ச்சி.
கிறிஸ்துப் பிறப்புக்கு முன்புமில்லை அந்த மகிழச்சி
கிறிஸ்துவை அறிந்தால் உமை விட்டு நீங்காது இந்த மகிழ்ச்சி!

## அருள்பணியாளராக 51 ஆண்டுகளை கடந்துள்ளார் திருத்தந்தை

1969ம் ஆண்டு, இயேசு சபையில் அருள்பணியாளராக திருநிலைப்படுத் தப்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அந்நிகழ்வின் 51-ஆம் ஆண்டு நிறைவை, டிசம்பர், 13ம் தேதி, ஞாயிற்றுக்கிழமையன்று சிறப்பித்தார்.

1936-ஆம் ஆண்டு, டிசம்பர் 17-ஆம் தேதி பிறந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் 33-வது பிறந்தநாளுக்கு நான்கு நாட்களுக்கு முன்னர் 1969-ஆம் ஆண்டு, டிசமபர் 13-ஆம் தேதி, இயேசு சபை அருள்பணியாளராக திருநிலைப்படுத்தப் பட்டார்.

1998-ஆம் ஆண்டு முதல் புவனஸ் அயிரெஸ் பேராயராக பணியாற்றியபோது, 2001-ஆம் ஆண்டு, திருத்தந்தை புனித இரண்டாம் ஜோன் பவுல் அவர்களால் கர்தினாலாக உயர்த்தப்பட்டார்.

2013-ஆம் ஆண்டு பிப்ரவரி 28ம் தேதி முன்னாள் திருத்தந்தை 16-ஆம் பெனடிக்ட் அவர்கள், பதவி விலகியதைத் தொடர்ந்து, அதே ஆண்டு மார்ச் 13-ஆம் தேதி திருஅவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இம்மாதம் 13-ஆம் தேதி, ஞாயிற்றுக்கிழமையன்று தன் அருள்பணித்துவ வாழ்வின் 51-ஆம் ஆண்டை நிறைவு செய்தார்.

# ஆண்டவர் திருவுளம் நம்மில் நிறைவேறுவதாக!

திருவருகைக் காலம் நான்காம் }ஞாயிறான இன்று நாம் படிக்கக்கேட்ட வாசகங்கள் தரும் சிந்தனையானது, நாம் நமது விருப்பத்தை அல்ல, இறைவிருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற இறைவனின் எதிர்பார்ப்பை நமக்கு எடுத்துரைக்கிறன.

முதல் வாசகத்தில் தாவீது அரசர் இறைவாக்கினர் நாத்தானிடம், "நான், கேதுரு மரங்களாலான அரண்மனையில் வாழ்கிறேன். கடவுளின் பேழையோ கூடாரத்தில் குடியிருக்கிறது" என்று சொல்லி ஆண்டவருக்காக ஆலயம் கட்டவேண்டும் என்ற தன்னுடைய விருப்பத்தை எடுத்துத்துரைக்கின்றார். அன்று இரவே கடவுள் நாத்தான் இறைவாக்கினருக்குத் தோன்றி, தாவீது ஆலயம் கட்டவேண்டாம் என்றும், தாமே அதனைக் கட்ட இருப்பதாகும் தாவீதிடம் சொல்லச் சொல்கிறார். இங்கே தாவீது தன்னுடைய விருப்பத்தின்படி நடக்க இருந்தார். ஆனால் ஆண்டவரின் விருப்பமோ வேறொன்றாக இருந்ததை நாம் அறிகிறோம்.

நற்செய்தியிலோ, லூக்கா மற்றொரு செய்தியை நமக்கு அளிக்கிறார். அன்னை மரியாளிடம் ஆண்டவரின் தூதர் வந்து, "கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்; அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர்... அவர் யாக்கோபின் குடும்பத்தின்மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது" என்று சொல்கிறபோது, "நான் ஆண்ட வரின் அடிமை; உம சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று சொல்லி இறைவிருப்பம் நிறைவேற தன்னையே முழுமையாக இறைவனுக்குக் கையளிக்கிறார். அன்னை மரியாவுக்கும் தாவீது அரசருக்குமான வேறுபாட்டை இங்கே காண்கிறோம் ஆம், தன்னுடைய விருப்பத்தின்படி நடந்த தாவீதால் கடவுளுக்கு ஆலயம் கட்டமுடிய வில்லை, மாறாக இறைவிருப்பத்தின்படி நடந்த அன்னை மரியாவால்தான் ஆண்டவருக்கு தன்னுடைய உடலால் இறைமகன் இயேசு வாழ்வதற்கு ஆலயம் கட்ட முடிந்தது. நாம் இறைவிருப்பத் தின்படி நடக்கின்றபோது இறைவன் நம் வழியாய் அற்புதங்களையும் அதிசயங் களையும் செய்வார் என்பது இன்றைய நற்செய்தி நமக்குப் புலப்படுத்துகிறது.

பலநேரங்களில் நாம் நம்முடைய விருப்பத் தின்படியே நடக்கிறோம், நம்முடைய எண்ணத்தின்படியே வாழ்கிறோம். அதனால் தான் என்னவோ கடவுளது அற்புதங்களும், அதிசயங்களும் இப்புவியில் நிகழாமலே போய்விடுகின்றன. ஆதலால் நாம் அன்னை மரியாவைப் போன்று, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைப் போன்று இறை வனின் திருவுளம் என்ன? அவரது திட்டம் என்ன என்பதை உணர்ந்து அதற்கேற்ப நமது வாழ்வை அமைத்துக்கொள்வோ மானல் அற்புதங்கள் நம்மிலும் நிகழும், "என் எண்ணங்கள் உங்கள் எண்ணங்கள் அல்ல, உங்கள் வழிமுறைகள் என் வழிமுறைகள் அல்ல, என்கிறார் ஆண்டவர். (எசா 55:8)

நற்செய்தி வாசகத்தில் ஆண்டவரின் விருப்பத்தின்படி வாழ முயன்ற மரியாவைப் பார்த்து வானதூதர், "அருள் நிறைந்தவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்" என்று வாழ்த்துகிறார். ஆகவே, நாம் இறைவிருப்பத்தின்படி நடக்கின்றபோது இறைவனின் துணையைப் பெற்றுக்கொள் வோம் என்பது உறுதி.

மெசியாவின் வருகை கடவுள் இந்த உலகத்தின்மீது கொண்ட பேரன்பைக் காட்டுகிறது. அதனால்தான் திருப்பாடல் ஆசிரியர், ஆண்டவரின் பேரன்பைப்பற்றி நான் என்றும் பாடுவேன்" என்று நம்பிக்கையோடும் துணிவோடும் பாடுகிறார். (திபா 89).
புனித பவுலும் இரண்டாம் வாசகத்தில், "இயேசு கிறிஸ்துவைப்பற்றி நான் பறைசாற்றும் நற்செய்திக்கு ஏற்ப வாழக் கடவுள் உங்களை உறுதிப்படுத்தவல்லவர்" என்று நம்பிக்கையிட்டுகிறார்.

எனவே, கடவுள் இந்த மனுகுலத்தின்மீது கொண்டிருக்கும் பேரன்பை நினைத்துப் பார்ப்போம். அவரது விருப்பம் எப்போதும் நிறைவேறத் துணிவோம். அதன்வழியாக அவர் அளிக்கும் உடனிருப்பையும், அரவணைப்பையும் பெறுவோம்

*-லூர்தம்மாள் ரோக்கியசாமி, காஜாங்*

**திருவருகைக்காலம் 4-ஆம் ஞாயிறு**

2 சாமு 7: 1-5, 8b-12, 14-16
திபா 89: 1-2. 3-4. 26,28 .
உரோ 16: 25-27
லூக்கா 1: 26-38

**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம்: I**
**திருப்புகழ் மாலை : வாரம் 4**